III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.48/2017

Deposition of witness for the Defendant/DW2
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 25-09-2023

| | | | |
|---|---|---|---|
| Name | : D.Sudharsanam | Caste | : |
| Father's Name | : Damodharan | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

27-08-2010 அன்று எனது தகப்பனார் தாமோதரனின் சகோதரர்கள் அவர்களுக்கு வா.த.சா.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து குறித்து ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். கவிதா எனது தந்தையின் சகோதரி. கவிதாவிற்கு அவரின் சகோதர சகோதரிகள் சேர்ந்து வேறு சொத்து குறித்து விடுதலை பத்திரம் அதே தேதியில் எழுதி கொடுத்துள்ளார்கள். வா.த.சா.1 ல் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் எச் என குறிப்பிப்பட்டுள்ள பகுதி கவிதாவிற்கு விடுதலை பத்திரம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. 26-07-2012 அன்று எனது தகப்பனார் கமர்சியல் எம்பிளாயிஸ் கோஆப்ரேட்டிவ் சொசைட்டியில் வா.த.சா.1 சொத்தை அடமானம் வைத்து ரூ.8,00,000 கடன் பெற்றுள்ளார். 2012 ல் எனது தகப்பனார் வீடு கட்டி வந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது என்றால் அந்த சூழ்நிலை 2014 ல் இருந்தது. பி.த.சா.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள மேக்சி கேப் வாகனத்திற்கான மதிப்பு அந்த ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த வாகனத்தை எனது தகப்பனார் எஸ்.டி.பி பினான்சியல் சர்வீஸஸிலிருந்து கடன் பெற்று தான் வாங்கினார். எனது தகப்பனார் ரூ.7,00,000 அதற்காக கடன் பெற்று அதை 4 வருடத்தில் திருப்பி செலுத்துமாறு ஏற்பாடு செய்தார். அந்த வானத்தில் என்றைய தேதியில் எவ்வளவு தொகைக்கு எனது தகப்பனார் விற்றார் என்பதற்குரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். பி.த.சா.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தை விற்று தான் வா.த.சா.2 அடமானம் மீட்கப்பட்டது என்று நான் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. கவிதா வாதியிடமிருந்து தனியாக கடன் பெற்றுள்ளார். கவிதா அவ்வாறு கடன் வாங்கும் போது அவர் பெயரில் உள்ள விடுதலை பத்திரத்தை வாதியிடம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதனுடன் எனது தகப்பனாரின் பெயரில் உள்ள வா.த.சா.1 பத்திரத்தையும் கவிதா கொடுத்துள்ளார். கவிதா அடமான கடன் வாங்கும் போது வா.த.சா.1 பத்திரம் எனது தகப்பனாரிடம் இல்லை என்றும் ஆதலால் அதை கவிதாவோ எனது தந்தையோ கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.த.சா.2 அடமானம் 2014 அன்று தான் மீட்கப்பட்டது என்றால் சரிதான். வா.த.சா.2 அடமானத்தை மீட்பதற்காகவும் கட்டுமானம் கட்டுவதற்காகவும் எனது சகோதரிகளின் திருமண செலவுகளுக்காகவும், எனது தகப்பனார் ரூ.29,00,000 கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அந்த கடனை பெற்றுக் கொண்டு தான் எனது தகப்பனார் 24.04.2014 அன்று வா.த.சா.3 கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த கடனை வாதியிடம் பெற்ற பின்னர் வா.த.சா.2 அடமானத்தை மீட்டு, வா.த.சா.1 மற்றும் 2 அசல் பத்திரங்களை எனது தகப்பனார் வாதியிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது கட்சிப்படி கவிதா வாதியிடமிருந்து 19.04.2013 அன்று ரூ.4,00,000 மற்றும் 25.06.2013 அன்று ரூ.2,00,000 கடன் வாங்கினார். கவிதா, நான் சொல்லியிருப்பது போல், ரூ.6,00,000 கடன் பெற்றிருந்திருந்தால், அவர் பெயரில் உள்ள விடுதலை பத்திரமே போதுமானது என்றும், வா.த.சா.1 மற்றும் 2 பத்திரங்கள் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2013 ல் கவிதா பெற்ற கடனுக்காக ஜூன் 2014 ல் வா.த.சா.1 மற்றும் 2 பத்திரங்களை அவர் கொடுத்தாக நான் சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. வா.த.சா.3 க்கு பின்னர் 26.10.2016 அன்று எனது தகப்பனார் அந்த கடன் மற்றும் அதற்கான வட்டியுனான தொகைக்கு ரூ.45,82,000 த்திற்கு வா.த.சா.4 காசோலை வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த காசோலையில் உள்ள கையொப்பம் எனது தகப்பனாருடையது தான். அந்த காசோலை வங்கியில் செலுத்தப்பட்டு திரும்பி வந்ததன் காரணமாக வாதி எனது தகப்பனார் மீது அம்பத்தூர் விரைவு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஒரு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு

தள்ளுபடியான பின்னர், வாதி மேல்முறையீடு தாக்கல் செய்து அவ்வழக்கு எண்.113 /2018 இந்நீதிமன்றத்தில் abate ஆகியுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.7 ல் எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் இராதாகிருஷ்ணன் நாயக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.3 முன்னிலைக்கு வாதியிடமிருந்து ரூ.29,00,000 எனது தகப்பனார் கடன் பெற்றுள்ளார் என்றும் அதை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் எனது தகப்பனாரும் பின்னிட்டு நாங்களும் காசோலையை செக்யூரிட்டிக்காக கொடுத்தாக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. கவிதாவின் மீது வாதி இந்நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியும். அடமானம் வைத்து கவிதா பெற்ற கடனுக்கான வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். ஆதலால் வாதி கோரியுள்ள படி இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.